# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

௰௨ம். புத்தகம், சஞ்சி. ௨௪.] ௲௮௱௫௰௨ம் ஞூ. மார்கழி ௴. ௨௩ ௨. வியாழக்கிழமை.—Thursday, December, 23, 1852. [Vol. XII. No. 24.

[Conversion of a Romanist and his Family.]

## உரோமான் மார்க்கத்தவர்களுக்குள் குணப்படுதலைக் காட்டியது.

சிலநாளுக்கு முன்னே பெங்களூரிலே பாப்புமார்க்கத்திலுள்ள ஒருவனும் அவன் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் கிறிஸ்துமார்க்கத்தில் பிரவேசித்தார்கள். அவன் வாசம்பண்ணின ஊர் ஆலம்பாடி. அங்கே அவன் அனேக வருஷமாக உரோமான் சபையாருக்கு உபதேசியாயிருந்தான். அவன் ஒரு காரியத்தினிமித்தம் தரும புரத்துக்குப் போயிருக்கையில் சேலத்திலிருந்து அங்கே வந்திருந்த ஒரு உபதேசி இரட்சிப்பின் மார்க்கத்தைக் குறித்து அவனோடேசம்பாஷித்துச் சுவிசேஷத்தில் ஒரு பங்கை அவனுக்குக் கொடுத்தான். அதை அவன் கவனமாய் வாசித்ததினாலே அவன் மனசு தெளிவாக்கப்பட, பாப்பு மார்க்கத்திலுள்ள பழுதுகளைத் தான் கண்டறிந்ததுமல்லாமல், அதைக் குறித்து மற்றவர்களோடும் பேசத் தொடங்கினான். அவனுடைய செய்கையைக் குறித்து உரோமான் சபைக்குரு கேள்விப்பட்டு, மிகவும் எரிச்சலடைந்து அவனை அதட்டி அவனுக்குப் பலவிதமாய்த் துன்பஞ்செய்யத் தலைப்பட்டார். அவ்வேளையில் அவனுடைய மனைவிக்குச் சவுக்கியத்தப்பு உண்டாயிருந்தது. அவன் பெங்களூரில் வயித்தியமாரும் சுவிசேஷ போதகர்களும் உண்டென்று கேள்விப்பட்டு அங்கேபோனால் தன் மனைவிக்கு மருந்துகொடுப்பிக்கலாமென்றும் சுவிசேஷ போதனையை அதிகமாய்க் கேட்டறியலாமென்றும் எண்ணி, சமுசாரத்தோடே அவ்விடத்துக்குப் போனான். அவன் அங்கே சேர்ந்த உடனே அங்குள்ளவர்களிடத்தில் கிறிஸ்துமார்க்கக் கோவில் எங்கேயென்று விசாரிக்க, கன்னடியருக்காகக் கட்டப்பட்டிருக்கிற கோவிலை அவனுக்குக் காண்பித்தார்கள். அவன் அதிற் பிரவேசித்துச் சுவிசேஷ வசனத்துக்குச் செவிகொடுத்துப் பின்பு போதகரிடத்திற்குப் போய்த் தன் நோக்கத்தை அவருக்கு அறிவித்தான். போதகர் அவனுக்கு ஏற்ற புத்தி சொல்ல, அவன் ஸ்திரமடைந்து கோவில் ஆராதனைகளுக்கும் மற்ற இடங்களில் கூடுகிற செபக் கூட்டங்களுக்கும் முறையாய்ப்போய் வந்ததினாலே இரட்சிப்பின் மார்க்கத்தை முன்னிலும் அதிக தெளிவாய் அறிந்ததுமல்லாமல் சத்தியந் தன் மனசில் தங்க அதிகமாய் உணர்த்தப்பட்டும் இருந்தான்.

அவன் அவ்வேளையில் அங்குள்ள ஆசுபத்திரியில் வைக்கப்பட்டிருந்த தன் மனைவிக்குத் தான் அறிந்த சத்தியத்தை விளக்கிக் காட்டினதுமல்லாமல், உண்மையுள்ள சில கிறிஸ்தவர்கள் அவளிடத்தில் முறையாய்ப்போய்ப் புத்திசொல்லியும் வந்தார்கள். அவள் இரட்சண்ணிய உபதேசத்தின் மேல் அதிக ஆவலுள்ளவளாய் இருந்ததினாலே சொல்லப்படுகிற புத்திகளுக்குக் கூர்மையாய்ச் செவிகொடுத்துவந்தாள். அவர்கள் இருவரும் மெய்யாய்க் குணப்பட்டவர்களென்று தெரியவந்ததால் போன சித்திரை மாதத்தில் அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் அனேக சனங்களுக்கு முன்பாக ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் போதகர், எல்லாவற்றையும் ஆராய்ந்துபார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்கிற வேதவாக்கியத்தை எடுத்து விஸ்தரித்துப் புத்தி சொன்னார். அப்பொழுது அவர்கள் முன் பூசைசெய்துவந்த குருசையும் செபமாலையையுந் தங்கள் கழுத்திலிருந்து கழற்றிப்போட்டுச் சிலுவையில் அறையுண்ட இயேசுநாதரே தங்கள் இரட்சிப்புக்குக் காரணர் என்றும், அவருடைய கிருபையைக் குறித்தே அல்லாமல் வேறொன்றையுங் குறித்தும் மேன்மை பாராட்டத்தக்கதில்லை என்று சொல்லித் தங்களைக் கத்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அந்நேரத்திலே நடந்தவைகளைக்கண்டும் சொல்லப்பட்டவைகளைக் கேட்டுமிருந்த சனங்களுக்கு நல்ல எழுப்புதல் உண்டாயிற்று.

அவனுடைய மனைவி தனக்குண்டாயிருந்த வியாதியினாலே ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னும் பின்னும் அனேகநாள் மிகவும் வருத்தப்பட்டாள். வயித்தியன் அவளுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளுங் கொடுத்து அவளை உரிமையாய் விசாரித்து வந்தார். நாளுக்குநாள் அவள் வியாதி லேசுவாகி வருகிறதைக் கண்டு, சுகமடைவாளென்று எல்லாரும் நம்பி இருந்தார்கள். சில நாளுக்குப் பின்பு அந்த வியாதி மறுதலித்ததினாலே அவர்கள்நம்பிக்கையெல்லாம் அற்றுப்போயிற்று. மரணம் தனக்கு அடுத்திருக்குமென்று அவள் அறிந்து சற்றுங் கலங்காமல் அமைதலோடே தன் புருஷனையும் பிள்ளைகளையும் தன் கட்டிலருகே வரவழைத்து, தன் புருஷனை நோக்கி, நீர் எனக்காகத் துக்கப்பட வேண்டாம். உம்முடைய ஆத்தும இரட்சிப்பைக் குறித்துக் கவலை உள்ளவராய் இருக்க வேண்டுவதுமல்லாமல், பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்தி வரும்படியாக மரணத் தறுவாயில் இருக்கிற நான் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். நமது இரட்சகராகிய இயேசுநாதர் மேலே நான் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறதினாலே மரணத்துக்கு அஞ்சாமல் ஆயத்தமாய் இருக்கிறேன். அவரை அன்றி எனக்கு வேறொரு அடைக்கலமில்லையென்று சொல்லி, சற்றுநேரத்துக்குப் பின்பு தன் கண்களை மூடி ஆவியை ஒப்புவித்தாள். அவள் இங்கே இருக்கையில் அவளுடைய நோவு மிகுதியாகவே இருந்தது. இப்பொழுது அவள் போயிருக்கிற உன்னத இஸ்தலத்திலே நோவும் துக்கமும் யாதொரு வருத்தமும் மரணமும் உண்டாயிருப்பதில்லை. மெய்யாய்க் கத்தருக்குள்ப்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

---

[A kind Word to Romanists.]

## உரோமான் கிறிஸ்தவர்களுக்கு ஒரு நேசபுத்தி.

என்னருமையான சினேகிதரே, உரோமான்காரராகிய உங்களுக்கும் புறோட்டேஸ்டென் மார்க்கத்தவர்களுக்கும் வெகுகாலமாகத் தருக்கங்கள் உண்டாயிருந்தும் அத்தருக்கங்களினால் யாதொருவருக்கென்கிலுஞ் சற்றேனும் நன்மையில்லாமற் போயிற்றென்றதை நினைக்கச் சகலருக்கும் மிகவுந் துக்கமாகவே இருக்கும். ஆனால் தருக்கம் பண்ணுவதில் ஒருவன் தன் மார்க்கத்தை விட்டு மறுமார்க்கத்திற் சேர்வானென்று நம்புதல் வீணென்றதற்கு இது அத்தாட்சியாயிருக்கின்றது. நீங்கள் என்னினத்தவர்களும், என் இரத்த உரித்தானவர்களுமாய் இருக்கிறதினால், மற்றவர்களைப் பார்க்கிலும் உங்கள் நன்மையை நான் அதிகமாய் விரும்புகிறேனென்பதற்கு என் மனதும், என் இருதயங்களின் சிந்தனைகளை ஆராய்ந்து அறிபவராகிய தேவனுமே சாட்சி. நீங்கள் இச்சீவியத்தில் நன்மையாய் வாழ்ந்திருக்குதல் எனக்கு மிகவுஞ் சந்தோஷந்தான், ஆகிலும் இவ்வுலக நன்மையைப் பார்க்கிலும் பரம நன்மையே முக்கியமென்று எவர்களும் ஒத்துக்கொள்வதினால் அதையே நீங்கள் நாடித் தேடுவதும் அதை அடையும்படிக்கான வழிவகைகளைக் கையிட்டுக்கொள்வதுமே எனக்கு மகா சந்தோஷம். நான் உங்கள் ஆத்தும நன்மையை விரும்புகிறவனென்று நீங்கள் நன்றாய் உணரும்படி இவைகளையெல்லாம் நான் சொன்னேன். இப்பொழுது நீங்கள் அப்படியே உணருகிறீர்களென்று நம்பி உங்களுக்குப் புத்திபோதனையாகச் சில காரியங்களைச் சொல்லத் துணிகிறேன். வேதமாவது ஆத்துமா மோட்சகரையேறி ஈடேற்றம் பெறுவதற்கான ஓர் வழியேயாம். இரட்சிப்படைய விரும்புகிறவன், தேவனைப்பற்றியும், ஆத்துமாவைப் பற்றியும், தேவபத்தியைப்பற்றியுஞ் சரியான அறிவுடையவனாய் இருக்கவேண்டுமே. ஆகையால் இக்காரியங்களைப்பற்றிச் சரியான அறிவைப் போதியாத வேதம் வேதமல்லவே. அவ்வேதத்தை நம்பியிருக்கிறதும் வீணே. ஆ! சினேகிதரே, ஆத்துமகாரியத்திற் காலதாமதம் பண்ணுதலைப்போல மோசமானகாரியம் உண்டோ? ஒருவன் உலகம் முழுவதையுஞ் சம்பாதித்துத் தன் ஆத்துமாவை இழந்துபோவானாகில் அவனுக்கு என்ன இலாபம்? கோடாகோடி திரவியங் கொடுத்தாலும் ஒரு ஆத்துமாவை நரகத்திலிருந்து மோட்சத்திற் சேர்த்துக்கொள்ளக்கூடாதே. தேவன் நிருபித்த தீர்வை மாறாதே.

உலகத்திலே அனேகவிதமான வேதங்களிருக்கின்றன. ஆனால் அவைகளெல்லாம் உண்மையான வேதங்களாயிருக்கக்கூடாது. சிலர் ஒரேயிடத்திற்குப் போகும்படியாகப் பலவழிகள் இருக்கிறதுபோல மோட்சமாகிய ஒரேயிடத்திற்குப்போகப் பலவழியாகிய பலவேதம் இருக்கின்றனவென்றும், ஒவ்வொருவனுந் தன்தன் வேதப்பிரமாணங்களின்படி நடந்துவந்தால் மோட்சஞ்சேர்வானென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் இப்படிச்சொல்லுதல் முழுதுந் தப்பிதமென்று யாவருக்கும் விளங்கும். வேதங்களெல்லாம் பராபரனால் உண்டாயிற்றென்றால், இவ்வேதங்கள் ஒன்றிற்கொன்று விரோதமாயிருக்கிறதுபோலப் பராபரனிடத்திலும் ஒன்றிற்கொன்று விரோதமான பலபல சித்தங்கள் உண்டாயிருக்க வேண்டுமே. ஆனால் அப்படியெண்ணுதல் மகா தப்பிதம். ஆகையால் உண்மையானதுந் தேவனாலுண்டானதுமாகிய வேதமொன்றே இருக்கவேண்டும், பலதிருக்கக்கூடாது. சகலரும் இரட்சிக்கப்படுவார்களென்று சொல்லுதல் தப்பிதமாயிருக்கிறதுபோல, உரோமான் மார்க்கத்தவர்களைத் தவிர மற்றெந்தச் சமயத்தவர்களும் இரட்சிப்படையமாட்டார்களென்குதலுந் தப்பிதம். உண்மையான வேதம் நான் முன்சொன்னபடியே மெய்த்தேவபத்தியைப் போதிக்க வேண்டுமே. ஆனால் உங்கள் வேதச் சடங்குகளில் மெய்த்தேவபத்தியை எழுப்பத்தக்கது ஏதென்று நான் அறியேன். நீங்கள் சடங்குகளைக் கைக்கொண்டு வருகிறதல்லாமல் வேதபோதனைகளிலே ஏதாகிலும் உங்களுக்கு விளங்குமென்று நான் நினைக்கவில்லை. கண்களுக்குப் பிரியமானதும் வேடிக்கைப் பிரகாரமுமான சடங்குகளினால் இருதயத்தில் உண்மையானதும், நிலைத்திருக்கக் கூடியதுமான பத்தி உண்டுபடுமென்று நினைக்கக் கூடாது. இருதயத்திலிருந்து உண்டுபட வேண்டிய எண்ணங்களுக்குப் பதிலாகச் சில வெளிச் சடங்குகளையும், வாய்ப்பாடமான சில செபமந்திரங்களையும் அப்பியாசித்து வருதல், தேவனை அணுப்பத்துவங்கி உங்களைத்தானே அணுப்பிக்கொள்வதாய் முடியும். வாய்ப்பாடமான செபங்களைக் கடகடென்று சொல்லிக் கையிலிருக்குஞ் செபமாலைகளால் எண்ணிக்கொள்ளுதலால் யாதொரு பலனுண்டோவென்று நீங்கள்தானே கவனித்துப் பார்ப்பீர்களாக. என்னருமையானவர்களே, வீண் நம்பிக்கையை விட்டுவிடுங்கள். இக்காரியங்களைப்பற்றி இனிமேல் அதிகமாய்ச் சொல்வேன். இப்படிக்கு, உங்கள் ஆத்துமநேசனாகிய அருமையான ஓர் இனத்தவன்.

---

[Missionary Progress in China within a Quarter of a Century.]

சீனதேசத்திற் தேவ பணிவிடையை நடப்பித்து வந்த ஒருபோதகர் அமேரிக்கன் வோட்டார் கூடுகிற வருடாந்தக் கூட்டத்திற் சொன்னகாரியங்களின் சில பொழிப்பாவன,

இற்றைக்கு இருபது வருடத்திற்குமுன் இச்சங்கத்தார் அல்பேனியென்கிற இடத்திற் கூடின வேளையில் நானும் அவ்விடத்திலிருந்தேன். அப்பொழுது அச்சங்கத்தின் எழுத்துக்காரியஸ்தன் என்னை அழைத்துச் சீனதேசத்திற்குப்போய் அவ்விடத்திற் தேவ ஊழியத்தை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆகையால் நானும் அவருடைய கேள்விக்கு உடன்பட்டுப் பின்பு சீனதேசத்தில் நெடுநாளாய் வாசம்பண்ணி அவ்விடத்திற் காரியங்களை நன்றாயறிந்த ஒரு துரையினிடத்திற்குப்போய் ஆலோசித்தேன். அந்நேரத்தில் அவரும் என்னைத் தைரியப்படுத்தினதுமன்றித் தாம் தம்முடைய சொந்தச் செலவினால் ஒருவரை அவ்விடத்திற்கு அனுப்புவேனென்றுந் தேவையானால் அவரைத் தாமே தாபரிப்பேனென்றுஞ் சொன்னார். இவைகளை நான் கேட்டபொழுது இத்தனை பெரிய பணிவிடையைச் செய்வதற்கு நான் அபாத்திரனென்றெண்ணியும், காரியமிருக்கிறமாதிரிக்கு நான் மறுதலிக்கப் படாதென்று நினைத்து மனப்பூருவமாய் அவ்விடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே நான் சேர்ந்தபொழுது, அந்தப் பெரிய இராச்சியம் முழுவதிலும் என்னை உபசாரமாய் அழைத்தவர் ஆக ஒரேயொருவர் மாத்திரமுண்டு. அவர் அவ்விடத்தில் ௲௮௱௭ம் ஆண்டிற்போய்த் தேவ ஊழியத்தில் அதிக சாக்கிரதையாயிருந்து, கிறிஸ்துமார்க்கக் காரியங்களை அந்தப் பாஷையில் திருப்புவது கொலைக்குரிய குற்றமாயிருந்த வேளையில் முதல் முதலுக்கு வேதவாக்கியங்களைச் சீனப்பாஷையில் திருப்பினார். இவ்வண்ணமாய் எங்கள் பணிவிடைகளை அவ்விடத்தில் தொடங்கினோம். முன்னே கிறிஸ்துமார்க்கப் பிரபலியத்துக்கு விரோதமாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கட்டளைகள் தள்ளப்பட்டு இப்பொழுது இட்டமாகி அவ்விடத்தில் எழுபது சுவிசேஷப் போதகர்மாருக்கு அதிகமான பேர்கள் தேவபணிவிடையைச் சாக்கிரதையாய் நடத்திவருகிறார்கள். ஆகையால் நீங்கள் தைரியவீனப்பட இடமில்லை. துருக்கதேசத்தில் நடந்த பிரகாரமாக இவ்விடத்திலும் நிறைவேறுமென்பதற்குச் சந்தேகமில்லை. மறுபகுதிகளிலும் இருந்து வே

தபோதகர் அத்தேசத்தின் இராசதானிக்கு அருகாகப் போய்த் தங்களாற் கூடியளவு கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுசாரிகளாய் இருப்பார்களென்று நம்புகிறோம். சீனதேசத்திலிருக்கும் நாலிலொருபங்குச் சனம் வாசிக்க அறிந்தவர்களானதினால் இந்த வேத புத்தகத்தை வாங்கி வாசித்து அவர்களே மற்ற மூன்றுபங்குச் சனத்துக்கும் இதனுண்மையை அறிவிப்பார்கள். அவ்வண்ணமாய்ப் பத்துவருஷத்திற்குள்ளே நாலிலொருபங்குச் சனமாகிய ௰ கோடிபெயரும் மற்ற ௩௰ கோடி சனத்துக்கும் அதின் உண்மையைப் பிரபலிய மாக்குவார்களென்று நம்ப இடமுண்டு.

[Results of Missions in India and Ceylon.]

மிசியோன் சங்கங்களையும் அவர்களுடைய நடபடிகளையும்பற்றி இதன் பின்னாற் காட்டியிருக்கும் விருத்தாந்தங்களை எழுதினவர் லொங்தோம் மிசியோனைச் சேர்ந்தவராய்க் கற்குத்தாவிலிருக்கின்ற கனம்பொருந்திய மல்லன்ஸ் ஐயர். இவ்விருத்தாந்தங்களை அவர் மகா பிரயாசத்துடனே பல விடங்களிலுஞ்சேர்த்து எழுதினபடியால் அவைகள் உண்மையும் நிதார்த்தமுமென்று நாங்கள் நம்பவேண்டியது.

௲௮௱௫௨ம் ஆண்டின் துவக்கத்தில் இந்துதேசத்திலும் இலங்கைத்தீவிலுமிருந்து கிறிஸ்துமார்க்கத்தைப் பிரபலியப்படுத்தும்பொருட்டுப் பிரயாசப்படும்படி இஸ்தாபிக்கப்பட்டிருந்த மிசியோன் சங்கங்கள் ௨௨. போதகர் ௪௱௪௩. அவர்களில் ௪௮ பேர் ஊர்ப்பிறந்து குருப்பட்டந் தரித்தவர்கள். ஊர்ப்பிறந்த உபதேசிகள் ௯௱௯௮. இந்தப் போதகர்மாரிருக்கப்பட்ட மிசியோன் தானங்கள் ௩௱௰௩. இஸ்தாபிக்கப்பட்ட சபைகள் ௩௱௩௧. நற்கருணைத் திருவிருந்தை அநுபவிக்கிறவர்கள் ௰௮௲௪௱௰. ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவர்கள் ஒரு இலட்சத்து ௰௨௲௱௯௧. போதகர்மாராற் தாபரிக்கப்படும் நாட்டுப் பள்ளிக்கூடங்கள் ௲௩௱௪௭. படிக்கும் ஆண்பிள்ளைகள் ௪௭௲௩௱௪. தருமப் பள்ளிக்கூடங்கள் ௯௩. படிக்குங் கிறிஸ்தப் பிள்ளைகள் ௨௲௪௱௰௪. இங்கிலீசுப் பள்ளிக்கூடங்கள் ௱௨௯. அவைகளிற் படிக்கும் ஆண்பிள்ளைகளும் வாலிபரும் ௰௪௲௩௱௯௨. பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்கள் ௩௱௪௭. படிக்கும் பிள்ளைகள் ௰௧௲௩௱௰௯. பெண்பிள்ளைத் தருமவிடுதிப் பள்ளிக்கூடங்கள் ௨௱௨ அவைகளிலுள்ள கிறிஸ்தப் பெண்பிள்ளைகள் ௨௲௭௱௭௯. ஏரோப்பையரின் நன்மைக்காக ௭௧ இடங்களில் ஒழுங்கான பிரசங்கங்கள் நடந்துவருகின்றன.

முழுவேதாகமமும் பத்துப் பாஷைகளிலேயும், புதியேற்பாடுகள் முற்றும் வேறே ஐந்து பாஷைகளிலேயும், சுவிசேஷப் பகுதிகள் வேறே நாலு பாஷைகளிலேயும் மொழிபெயர்க்கப்பட்டன. கிறிஸ்தவர்களுடைய நன்மைக்காக உண்டாக்கப்பட்ட அனேகம் புத்தகங்களைத் தவிர, இந்துக்களுக்கும் இஸ்லா மார்க்கத்தவர்களுக்குமாக ௭௰ வகையான துண்டுப் புத்தகங்களளவுக்கு வித்தியாசமான பாஷைகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்துதேசத்திலே குருமாரைச் சேர்ந்த அச்சுக்கூடங்கள் ௨௫. இப்படிப்பட்ட மிசியோன் சங்கம் யாவற்றுக்கும் வருடமொன்றுக்குச் செல்லுஞ்செலவு ஒரு இலட்சத்து ௯௰௲ பவுன். அதில் ஏறக்குறைய ஆறிலொருபங்குத் தருமம் இந்துதேசத்திலே வாசம்பண்ணுகிற ஏரோப்பை தேசத்துக் கிறிஸ்தவர்களாற் கொடுக்கப்பட்டது.

## உதயதாரகை.

௲௮௱௫௨ ௵. மார்கழி ௴. ௨௫. வ.

[Anniversary Teetotal Meeting at Oodoville.]

### மதுவிலக்குச் சங்கம்.

௲௮௱௫௨ம் ஆண்டு மார்கழிமாதம் ௰௭ந் தேதி வெள்ளிக்கிழமை இரவு உடுவிலிற் கோவிலிலே ஸ்தாபிக்கப்பட்ட முதல் வருஷாந்த சங்கம்.

உடுவிலின் மதுவிலக்குச் சங்கத்துக்குச் சேர்ந்த துணைச் சங்கத்தோரும் அவ்வவற்றின் உத்தியோகஸ்தர்களும் இன்று சாயங்காலமே ஏறக்குறைய ௫௱ பேரளவுக்கு இவ்விடத்தில்வந்து கூடினார்கள். சங்கைபோர்ந்த பூர்ஐயரவர்களைச் சபாநாயகனாய் அத்தருணத்திலே வைத்துக்கொள்ள உசாவினபோதே அச்சமுதாயத்தாரெல்லாருஞ் சாதாரண சந்தோஷத்துடன் சம்மதித்தார்கள். குருத்துவமுள்ள சபாநாயகன் பிரார்த்தனைபண்ணிக் கூட்டத்தை ஆரம்பித்தார். இச்சங்கத்தின் எழுத்துக்காரியஸ்தன் சங்கத்தின் பிரமாணங்களையும் அதின் சமாசாரங்களையும் வாசித்தபின்பு, பின்வருங் காரியங்கள் பேசப்பட்டன.

௧ வது. பிரசைகளுக்குள்ளே குடிவெறி பரம்பாதுதடுத்தல் இவ்வூரில் உத்தமர்பேரிற் பாரிக்கப்பட்டிருக்கிற பிரதான கடமையென்றும் இம்முயற்சியைநிறைவேற்றுதற்கு இவர்களெல்லாரும் ஐக்கியப்பட்டிருக்க வேண்டுமென்றும் மல்லாகம்நொத்தாரிஸ் ராச. சிறீ. அம். சரவணமுத்தரவர்கள் பேசினார்.

௨ வது. வெறிமயக்கத்திலுண்டுபடுந் தீமைகளும் இச்சங்கங்களின் பிரயத்தனங்களினால் இங்கேஞ்சனங்களுக்குள்ளே உண்டாயிருக்கிற நயவிருத்திகளும் நியாயத்தலங்களிற் காணப்படுகிறதென்று வடமாகாணத்து வடநாடுபற்று முதலியாரவர்கள் பேசினார்.

௩ வது. பித்துள்ள மஸ்துக்களை நாமாவது பிறராவது உட்கொள்ள நமக்குப் பிரீதியின்றென்பதை நம்மூராருக்கும் அரசாட்சியாருக்குங் காட்டும்விதம் இஃதென இச்சங்கத்து எழுத்துக்காரியஸ்தனாகிய மெஸ்தர் ஏச். எ. ஊட் என்பவர் பேசினார்.

௪ வது. எங்களுக்குள் அமைந்த தொண்டருக்குட்பரம்புங் குடிவெறியைத் தடைப்படுத்துவதால் அவர்கள் எங்களுக்கு ஊழியஞ்செய்ய மாட்டார்களென்றும் அவர்களுடைய சேவகத்துக்குப் பிரதியுபகாரமாய் எங்கள் மரங்களிற் சிலவற்றை மதுநீர்வடிக்க விடவேண்டுமென்றுஞ் சிலர் உத்தேசிக்கிறார்கள், அது புத்தியல்லவென்று இச்சங்கத்துக் காரியஸ்தர்களில் ஒருவராகிய மெஸ்தர் சே. ஆற. ஆநல்ட் என்பவர் பேசினார்.

௫ வது. கிறிஸ்துசமய சங்கத்தார் இவ்வூர்ப் பாலகரைக் கற்பிக்கத்தொடங்கின தொடக்கத்துக்கு மேற்குலத்தாராயிருக்கிற அனேகர் இடறாயிருந்தும் இக்காலத்தில் அதுகாரியங்கைகூடிவந்ததுபோல இச்சங்கத்தின் சங்கற்பங்களுக்குச்சில விக்கினமிருந்தாலும் அவைகளெல்லாம் வரவரச் சயிக்கப்படுமென்று சுன்னாகம் நொத்தாரிஸ் ராச. சிறீ. மண். பொன்னம்பலமவர்கள் பேசினார்.

௬ வது. சிலர், நியாயாதிகாரிகள் எங்களுடனே பிரியவீனப்படுவார்களென்று காரணமில்லாமல் உத்தேசித்து மதுவிலக்குறுதிப்பத்திரத்துக்குக் கையோப்பம் வைக்க அஞ்சுகிறார்களே அதற்கு ஔஷதமேதென்று மெஸ்தர் செ. எல்லியொற்று என்பவர் பேசினார்.

௭ வது. மதுவுட்கொள்ளுதலைச் சைவசமயமுங் கிறிஸ்துமார்க்கமுஞ் சமங்லையாய் விலக்கியிருக்கிறதென்றும் அதை இச்சமயங்களுக்கு அமையாதவர்கள் மாத்திரமே உட்கொள்ளுகிறார்களென்றும் அது முத்தி விக்கினமாயிருக்கிறதென்றுந் தேசசமாதானத்துக்கு விரோதமென்றுங் கலக வியாபாரிகளுக்கு இலாபமென்றும் இச்சங்கத்திற் பிரதித்தலைவனாகிய நாத்தானுவேல் உபதேசியாரவர்கள் பேசினார்.

௮ வது. அரசாட்சியார் சாராயக் குத்தகை விலைக்கிரயத்துக் கபயங்கொடாவிடிற் சனங்கள் அற்பனாயினும் அதைப் பருகமாட்டார்களென்று சிலர் சாதிக்கிறார்கள். அவர்கள் எங்களைச் சுயாதீனத்திற்கு விட்டுவிட்டதேயன்றிப் பலாத்காரம் பண்ணுகிறதில்லை. இந்தச் சங்கங்களின் அதிகாரத்துக்தச் சனங்கள் அமைந்தார்களாயின், வெறியரே விழித்து அழுங்கள். திராட்சப்பழ இரசங் குடிக்கிற சகல சனங்களே திராட்ச கந்தாயத்தினிமித்தம் அலறுங்கள். ஏனெனில் அது உங்கள் வாயை விலக அறுப்புண்டுபோமென்று யோவேல் தீர்க்கதரிசி முதலாம் அதிகாரம் ஐந்தாம் சுலோகத்திற்சொன்ன தீர்க்கதரிசனஞ் சித்தியாதுமென்று இச்சங்கத் தலைவராகிய மெஸ்தர் என். நயிலிஸ் பிரசங்கியாரவர்கள் பேசினார்.

௯ வது. இவ்வளவு மிகுதியான கூட்டத்தாரைக் கண்டதினாலே தான் மிகவும் இதுகாரியத்திற் பிரீதியாயும், திருத்தியாயுமிருக்கிறேனென்று சங்கைபோர்ந்த வேணல் ஐயரவர்கள் பேசினார்.

௰ வது. மிகுந்த சங்கைபோந்த ஸ்போல்டிங் ஐயரவர்கள் மனப் பூரணமுள்ளவராய் முதற் பேசினவர்களுடைய பேச்சின் விசேஷங்களையும் மதுவிலக்குச் சங்கத்துறுதிப்பத்திரத்துக்குக் கையொப்பம்வைக்க அஞ்சவேண்டுவதில்லையென்றதையுஞ் சொல்லி, வடமாகாணத்து வடநாடுபற்று முதலியாரவர்கள் தாஞ்சொன்னவைகளையும் அதற்கடுத்தவைகளையும் உதயதாரகைக்கு எழுதவேண்டிக்கொள்ளும்படி சபாநாயகனைக் குறிப்பாய் கேட்டுக் கொண்டார்.

௰௧ வது. யாழ்ப்பாணத்து மதுவிலக்குச் சங்கத்தைத்தானே அவையவியாயும் மற்றுமூர்கள் பலவினும் இருக்கிற சங்கங்களை அவையவமாகவுங் கொண்டு ஒரே யொழுங்கிலே ஒன்றாக்கிக் கொள்ளவேண்டியது அவசியமென்றும், கலாவிற்பன்னியாயும் அதிகார விருத்தனாயுமிருந்த ஒருவனுடைய குடிவெறியினாலுண்டான நஷடத்தையும் எடுத்துக்காட்டிச் சனங்களுக்கு எச்சரித்துப் சபாநாயகனாகிய சங்கைபோந்த தானியேற் பூரய்யரவர்கள் பேசினார்.

மேற்படி சபாநாயகன் தமிழிலே ஒரு தோத்திரகீதத்தைப்பாடிச் சபையை ஆசீர்வதித்துக் கூட்டத்தை முடித்தார். உடுவில் மதுவிலக்குச்சங்கத்து எழுத்துக்காரியஸ்தன். H. A. W.

[Imposition and Superstition, and their Detection.]

### அற்புதம்.

யாழ்ப்பாணத்திலுள்ள சனங்கள் ஏதும் அற்புதங்களைக் குறித்துப் பேசிக்கொள்ளும்பொழுது நல்லூரிற் கந்தசுவாமி கோவிலிலே ஒருவன் நாக்கை வெட்டினானென்றும் அது அவனுக்குத் திரும்பப் பூரணமாய் வளர்ந்ததென்றும் அதை அனேகர் கண்ணாரக் கண்டதாகவும் மிகவும் ஆச்சரியத்துடனே மெய்யாய்ப் பேசிக்கொள்ளுவார்கள்.

இவ்விதமாகச் சனங்கள் பேசிக்கொள்ளும் அற்புதம்போலொத்த வின்னொன்று, சில நாட்களுக்குமுன்னே வட்டுக்கோட்டையிலுஞ் சம்பவித்தது இவ்வூரார் தங்கள் ஊரிலே நடக்கும் அற்புதங்களை அறியவேண்டிய படியினாலே நாமும் வட்டுக்கோட்டையிசே நடந்த அற்புதத்தையும் அதினுடனடுத்த பிற்காரியங்களையும் இப்பொழுது சுருக்கமாகச் சொல்லுகிறோம். அவர்கள் அதைத் திட்டமாய் நம்பவேண்டும்.

கிட்டத்தட்டப் பதினாலுவயதுள்ள ஒரு பிராமணப்பையன் பிச்சையிரந்துகொண்டுவருகையில் அவனைப் பிடித்து நீயார்! உனக்கு என்ன வேண்டுமென்று கேட்க அவன் ஒன்றும் பேசத் திராணியில்லாதவனாய், தன் கையினாலே சமிக்கை மாத்திரங் காண்பித்து, தான் நாக்கில்லாமற் பிறந்தவனென்று எழுதியிருக்கும் ஒரு காகிதத்தைக் கொடுத்தான். அப்பொழுது அவன் வாயைத் திறந்து பார்க்க அங்கேயும் அவனுக்கு மற்றமனிதருக்குப்போல அவயவமில்லாதபடிக்கு அவயவக் குறைவாய்க் கண்டது. நாக்குக் கிடக்குங் கீழ்வாயிலே, ஒன்றுமில்லாதபடிக்கு வெறுமையாக இருந்தது. என்றாலும் அடிமிடற்றுக்குள்ளே சற்றும் அசையாததாக ஒரு துண்டுத்தசை காணப்பட்டது. ஆ! இது பெரிய பரதாபம்! இவ்வித பரதாபத்தைக் கண்டிரங்கி இந்தப் போடியனுக்கு ஏதுஞ் சகாயம்பண்ணவேண்டுமென்று துணிந்து அவ்வேளையிற் செய்யவேண்டிய புறக்கிரியைகள் யாவையும் முடித்துக்கொண்டு, அவனுடைய தொண்டைக்குள்ளே வலது கையிலுள்ள இரண்டு விரல்களை வைத்துப் பூரணமான நாக்கிருப்பவர்களுக்கு அதின் அடியிலிருப்பதாகிய நரம்புகளைச் சித்திரமாய்த் தடவினபொழுது அத்தப்பையன் ஏதோ வலிகொண்டவனைப்போல வளைந்து முறுகிப் பதைத்துத் அடித்தான். இத்தறுவாயிலே முன்னே மிடற்றுக்குள்ளே காணப்பட்ட துண்டுச்சதை, படிப்படியாய் நீண்டு கடைசியிலே ஏறக்குறைய ஒரு முழநாக்களவாயிற்று. இதற்குப் பின் அந்தச் சதை மெய்நாக்காயிற்றே அல்லவோவென்று சோதிக்கும்படி அவனைப் பேசச்சொல்லி நெருக்க, அவனுக்த உள்ளபடி அந்நாக்குச் சற்றே தட்டினது. ஆனாலுங் கடைசியிலே அவன் திறமாய்ப் பேசி இனிச் சற்றும் ஊமையல்லவென்று வெளியே போனான்.

நல்லூரிலே வெட்டின நாக்குத் திரும்பவளர்ந்து பெரிய ஆச்சரியமேயாகில், நாக்குச் சணப்பொழுதிலே முளைக்கவும் பேசவும் பண்ணினது எவ்வளவு அதிக ஆச்சரியமென்று பாருங்கள்.

இனிக் கந்தசுவாமிகோவிற் பூசாசாரி இவ்வற்புதத்தைக் கந்தசுவாமிக்குச்சொல்லி, அவருடைய கீர்த்தி குறையாமலிருக்கும்படி இதிலும் அதிகமான ஏதும் அற்புதஞ் செய்யச்சொல்லிக் கேட்டு அவரை ஏவிவிடட்டும். அவன் சொல்வதை அவர் கேட்கக் கூடாதபடிக்குக் காது செவிடென்றுகண்டால், இந்நாட்களில் அற்புதங்கள் நடந்துவரும்வட்டுக்கோட்டைக்கு அவரை அனுப்பிவைக்கட்டும். அப்படியுங் கூடாதிருந்தால், அவரை உண்டாக்கின கம்மாளனண்டைக்கு அனுப்பி அவருடைய காதைத் துளைப்பிக்கட்டும்.

**சென்னபட்டினம்:**—இவ்விடத்திலிருந்துவந்த ஒரு காகிதத்தினால் அறியுஞ்செய்தியென்னவெனில், இந்தமாதம் பன்னிரண்டாந் திகதி ஞாயிற்றுக் கிழமை ஒரு கப்பல் சென்னபட்டினத்திலிருந்து ஆஸ்திருலியாவுக்குப் பாய்வலித்தோடிற்று. அதில் ஐம்பத்துநாலு பறங்கிமாரும், சேவகம் பண்ணக்கூடாமல் வயதுசென்றவர்களாயிருந்த சிறிது சொல்தாதுமாரும் ஏறிப்போனார்கள். அல்லாமலும், கிருன்று என்னுங் குருவுடைய பள்ளிக்கூடத்திற் படிக்கிற இரண்டுவாலிபர் தங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கேட்டார்கள். அதைப்பற்றிப் பெரிய குழப்படி உண்டாயிற்று. ஒருவனை வலோற்காரமாய் எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். ஒருநாள் முழுவதும் அனேக சனங்கள்கூடி வீட்டைச் சூழ்ந்து அமளிபண்ணிக்கொண்டு நின்றார்கள்.

**எங்கள் சீவனேன்ன ?**—நாங்கள் இன்று மரித்தால், நாளைக்குச் சூரியன்நன்றாய்ப்பிரகாசியாமலும் பட்சிகள் கீதம்பாடாமலும் ஒழிகிறதில்லை. வேலை முயற்சிகளும் அற்பநேரத்துக்கேன்கிலும் தடங்கற்படுகிறதில்லை. சனங்களில் அநேகர் நாங்கள் இறந்ததைப்பற்றிச் சற்றும் நினைக்கமாட்டார்கள். கொஞ்சப்பேர் மாத்திரம் தங்கள் விளையாட்டுக்கு அல்லது தங்கள் வேலைக்குப் போகிற வேளையில் இன்னான் மரித்துப்போனானோவென்றுமாத்திரஞ் சற்றே பயபத்தியாய் விசாரணை பண்ணுவார்கள். ஆனாலும், எங்களுடைய நெருங்கிய உறவின்முறையாரைத் தவிர வேறொருவரும் எங்கள் மரணத்தைப்பற்றிச் சலிக்கமாட்டார்கள். கொஞ்சக்காலத்துக்குள்ளே உறவுமுறையாரும் எங்களை மறந்து, முன்னே அவர்கள் எங்களருகிலிருந்து சிரித்து விளையாடினதுபோலச் சந்தோஷப்படுவார்கள்.

இவ்விதமாய் எங்கள் சீவன் போகுது. எங்கள் அருகே வந்து நிற்கிற எங்கள் பிள்ளைகள்தானுங் கொஞ்ச வருடத்துக்குள்ளேமறந்துவிடுவார்கள். உயிரோடிருக்கிறவர்களில் ஆர்தான் அவனை எனக்குத் தெரியுமென்று சொல்லக்கூடும். நாங்கள் வேறொரு உலகத்தில் இருந்தோம். வெகுநாளைக்குமுன் கல்லறையில் நித்திரைக்குப்போன அனேகருடனே கூடி வேலைகளைச் செய்தோம். எங்கள் சீவனேன்ன ? கொஞ்சநேரந் தோன்றிப் பின்பு காணமற்போகிற புகைதானேயென்று என்றும் நினைக்கிறவனே வாழ்வுடையவன்.

நாங்கள் என்றும் நினைக்கப்படுகிற வாழ்வுடையவர்களாய் வரும்படிக்கு நாங்கள் எங்களுக்கென்று சீவியாமல், எங்கள் தேவனுடைய மகிமைக்காகவும் மற்றவர்களுக்கு நன்மையுண்டாகவும் பிரயாசப்பட்டுப் பிழைக்கும்படி தெண்டிப்போமாக.

---

பாரிசதேசத்து இராசாக்களிலொருவர் மகம்மது நபியிடத்திற் போதும்படி பேர்போந்த வைத்தியனொருவனை அனுப்பிவைத்தார். அவன் அவ்விடத்திலே வைத்தியஞ் செய்கிறதற்கு யாதொரு தேவையுமில்லாமல் வெகுநாளாய் இருந்ததினாலே மனந் தோய்ந்து கடைசியாய்த் தானும் நபியிடம் போய்ச் சொன்னதென்னவெனில் : எனக்குக் கட்டளைபண்ண உரித்துள்ளவர்கள் என்னை இவ்விடத்தில் வைத்தியஞ்செய்யும் முகாந்திரமாய் அனுப்பி வைத்தார்கள். ஆனாலும் நான் இவ்விடம் வந்ததின் பிற்பாடு வைத்தியஞ் செய்து என்னுடைய மேன்மையைக் காட்டுகிறதற்கு இடமில்லாமற் போயிற்றென்றான். அதற்கு மகம்மது சொன்னது : எங்களூர் வழக்கமென்னவெனில், பசியிருந்தாலன்றி மற்றும்படி நாங்கள் சாப்பிடுகிறதில்லை. சாப்பிடப்போயிருந்தாலும் இன்னுஞ் சாப்பிடமனமிருக்க, எழும்பி விடுகிறோமென்றார். அப்போ வைத்தியன் சொன்னது, சுகத்தைக் காக்கிறதற்கும் வைத்தியன் தேவையில்லாதிருக்கிறதற்கும் அதே வழியென்றுசொல்லி விடை பெற்றுக்கொண்டு பாரிசாவுக்குப் போய்விட்டான்.

---

**கொழும்பு.**—கொழும்பில் இந்நாட்களில் அதிகமாய் மழையடைத்துப் பெய்ததினால், சாமான்சரக்குகளைச் சேர்க்கவுங் கப்பலிலேற்றவுங் கூடாமலிருந்தது. பிரதானமாய் இந்தமாதம் ஐந்தாந் திகதியிலன்று முன்னொருக்காலுங் கண்டிராத விதமாய் எங்குமிருண்டு சற்றும் வெளிச்சமில்லாமல்மழை பெய்தது. எப்போ சூரியனுடையகிரணத்தை நாங்கள் காண்போமென்று சனங்களெல்லாரும் வாஞ்சைப்படுகிறார்கள்.

இவ்விதமாய் யாழ்ப்பாணத்திலும் வெகுநாளாய் விடாமழைபெய்து எங்கும் வெள்ளமெடுத்தது. நேற்றுமாத்திரஞ் சற்றே மேகம்வெளித்து வெய்யிலெறிக்கத் தொடங்கிற்று.

---

**புதுச்சேரி.**—புதுச்சேரியில் இராச்சியம்பண்ணுகின்ற பிரான்சிக்கார மகாராசாவானவர் இச்செலவுபண்ணியிருக்குங் கட்டளையென்னவெனில், சகல முறைப்பாடுகளையுங் கேட்கிறதற்குத் தாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறேனென்றும், வழக்குக்காரியங்களில் யாதாமொரு குறைவுகளைக்கண்டவர்கள் மன்றாட்டுக் கடதாசி மூலமாகவல்ல, அவர்கள் முகாமுகமாய்வந்து தன்னைக் கண்டுகொள்ளலாமென்றுந்தான்.

---

**உத்தியோகநியமம்.**—முன்னே பருத்தித்துறைக்குப் பொலீஸ் மஸ்திருத்தாயிருந்த லேயாட்டுத்துரை கொழும்புக்குப் பிசுக்காலாகவும், அநுராசபுரத்திலிருக்கின்ற புறூடியென்பவர் பருத்தித்துறைக்கு மஸ்திருத்தாகவும், பொலிஸ் என்பவர் மாத்துறைக்கு உதவி ஏசெண்ட்ராகவும், சீமான்காசிச்செட்டித்துரை சிலாபத்துக்கு டிஸ்திறிக்கு நீதவானாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

# MORNING STAR.

## Jaffna, Thursday, December 23, 1852.

SANDWICH ISLANDS.—We have now lying upon our table, two numbers of THE FRIEND, a handsomely printed English newspaper of eight pages, of a size per page a little less than the Star, published and edited by Rev. S. C. Damon, Seamen's Chaplain at Honolulu, Oahu, of the Sandwich group. "The Friend" is a monthly journal and is "devoted to temperance, seamen, marine and general intelligence." These two numbers are of June and July, and were sent by the editor to a member of the American Mission. We have been greatly interested in looking them over, and in thinking of the wide contrast between the present elevated position of those islands, as is shown by these papers, and that of 30 years ago, when the gospel was first sent to those then ignorant, degraded, and barbarous, but now enlightened, civilized and christianized islanders. We may hereafter give further extracts from "The Friend," but now content ourselves with noticing a few items only, as follows:

COFFEE.—Mr. Titcomb, of Hanalei, has forwarded us beautiful specimens of the product of his plantation. One specimen is hulled, the other is in its natural state, being dried. Mr. T. deserves much credit for his perseverance as a coffee grower, and we rejoice that the product of his plantation has met of late, with a good market. Purchasers will do well to examine Mr. T.'s coffee, for sale by Mr. Reynolds, Honolulu.

STRAWBERRIES AT KOLOA.—A correspondent thus writes under date of June 9th. "Mr. Damon, this is a paradise. Strawberries and cream! 'Oh, delicious,' I hear you exclaim. We have them three times a day, or as often as we choose to gather them. I have just filled a large bowl, in order to send to a sick lady at Waimea. I have never seen such monsters in size, anywhere, except in Chili."

WELL DONE CHINAMAN!—A friend recently allowed us to copy the following from a letter, dated March 6th, New Haven, Ct. "Only within a few days the prise in the Sophomore class, Yale College, for English composition has been taken by a Chinaman—a *Simon-pure celestial*, named Young Wing. This speaks well for the capacities of the Chinese, and shows what they might become under civilized culture."

The children of American missionaries at the islands, number 125, and among them only one death has occurred during last year.

Besides the above selections, which indicate enterprize, refinement, &c., we find a lengthy account of the second anniversary, lasting two days, of the "Royal Hawaiian Agricultural Society," the affairs of which seem to be managed with efficiency, and in a manner that would not disgrace either England or America. Notice is taken of an American cow, the first imported, and which had then been off the vessel only eight days, after a *five months'* voyage, and yet was in "*good condition* and had furnished about a gallon of milk daily" during the passage.

Under the heading "Anniversaries," we find notices of the annual meetings, in May, of four benevolent societies. The first is the "Hawaiian Missionary Society," with its list of officers, in which, as one of the five Vice Presidents, we see the name "John Ii," whom we presume to be a native. This meeting was only the 2d anniversary, and yet a large contribution of over £50 was taken up! The second was the "Hawaiian Bible Society," which during the 11 years of its existence has realized in contributions over $3,000, and had during the past year sold and granted 492 bibles and 460 testaments. The third was the "Hawaiian Tract Society," the members of which resolved to adopt the colporteur system at once, in order to counteract the "pernicious tendencies of the infidel, fictitious and licentious works which find their way" to the islands. The fourth was the "Hawaiian Temperance Society," which appears to be in a prosperous state, though we are grieved to notice in another article that 12 persons are licensed to sell liquors in Honolulu, and that the highest license sold for more than £210, while none went lower than £115! Honolulu, it should be remembered, is a seaport and a great resort of seamen, and this liquor is mainly consumed by sailors and foreigners.

---

☞ We hope to attend to "A Stellus" and "A Number of Subscribers" in our next issue.—"E. S. B. (Excelsior Summum Bonum,) writes us, complaining of our criticisms upon his article, but we choose to leave to the public rather than an interested party, to say whether they were just or not. We are glad, however, to state that E. S. B. is improving much in his style, and had he written as plainly at first as now, he would not have been consigned to the obscurity of the drawer of "rejected copy."—The poetical charade of A. L. S. is altogether too indifferent poetry to warrant its insertion.

---

MADRAS.—A private letter from Madras states that on Sunday the 12th inst., a vessel sailed from that port to Australia, with 54 East Indian emigrants and a number of disabled and worn out soldiers on board. Also that two of the older boys in Mr. Grant's school had asked for baptism, which had made quite a commotion and one had been carried off. All one day multitudes were about the house, very much excited.

THE POET MONTGOMERY—AN AFFECTING SCENE.—It was reported not long ago that the poet Montgomery was dead, but we are very glad to see that he is yet alive. We find an interesting notice in the *Edinburgh Witness* of September 1st, which we doubt not our readers, who are at all familiar with the poetry of Montgomery—of whom it has been said that "he has never written a line which dying he would wish to blot"—will read with great interest. Montgomery's residence is in Sheffield, England. His father was a Moravian missionary, and died on the island of Tobago, one of the West India group, where he was laboring for the spread of Christianity. This is the account:

The Sheffield Conference was brought to a close on Tuesday evening. On Saturday the poet Montgomery paid the assembly a personal visit. A writer in the *London Watchman* gives the following striking account of his reception:—He appeared on the platform, leaning heavily on the arm of Dr. Hannah, and was by him conducted to a seat in front of the platform. A few appropriate words from Dr. Hannah introduced him to the conference. The president addressed him in simple and graceful terms. Then the aged and hoary poet, somewhat bent, and very feeble in body, with silver hair shining in flakes as it fell thin upon his temples, or waved slightly upwards from the side of his head—stepped forward to the front of the platform, and raising his hands in prayer and blessing, pronounced the words,—"The Lord bless you and keep you; the Lord make his face to shine upon you, and be gracious unto you, the Lord lift up his countenance upon you, and give you peace." The beautiful and impressive way in which the poet uttered the last words of this prayer, was inexpressibly affecting. All felt that he was a patriarch of peace and purity who thus pronounced his benediction. The Christian poet, the laureate of poetry and gospel heroism, the spotless Moravian brother, James Montgomery, in his 80th year, dying more and more to the world whose praise has long echoed around him, but which he soon, very soon, must leave to go to that "grave" which he has so beautifully celebrated, that resting-place, the inmates of which have no more "portion forever in any thing that is done under the sun,"—and looking more and more to that home of the blessed where he shall join the "sister spirits," who, like him, have learned on earth to lisp the songs and breathe the music which they shall soon in full anthem swell in heaven—James Montgomery raised his prayer and bent his aged form in benediction over the assembly of the ministers of that church whose ordinances he had so long and dearly loved, and in whose public meetings of missionary zeal and piety he had so frequently presided. It was a scene long to be remembered—every trace was engraven on the heart in lines never to be effaced.

---

THE CALORIC SHIP, "ERICSSON."—We are happy to perceive from American accounts republished by the *London Times*, that the *Ericsson*, the first steamer with caloric engines, is nearly completed. She was to be launched in October, and her trial trip was expected to come off on the 1st November. The American writers believe that she will make a complete revolution in steam navigation, and that in fifty years there will not be a sail upon the ocean, as the expense of working the caloric engine is very small when compared with that of steam, and the number of engineers and firemen may be greatly reduced. The report of the trial trip will probably reach Calcutta on the 15th January and will be looked for with unusual interest.—*Friend of India, Nov. 18.*

In addition to the above, we extract the following from the *New York Independent* of Sept. 16th, which will give our readers some idea of the new principle in steam navigation which is exciting so much interest:

The Ericsson is externally a first class steamship, perhaps a trifle neater, trimmer, and more graceful than usual. Seemingly a steamship, the same contrast of black and gold, the same high-arching paddle boxes revealing the red iron wheels and floats, the same half way preparation for canvas. But really and within, what strange work! No steam, and no boilers to make steam, and no place to put them if they were wanted. No smoke, and no chimnies worth naming. No more hiss and roar, no more explosion. Hereafter all is to be dry and still—this is the caloric ship. A costly experiment truly, and, if successful, destined to work an entire revolution in mechanics—nothing less than entire disuse of steam as a motor. Four huge cylinders, each thirteen *feet* in diameter are to be set in a line along the keel. Under each is a little furnace, having two small fire doors, each furnace capable of holding perhaps three or four bushels of coal. A ton of anthracite will start them all! Each pair of cylinders constitutes an engine. Their united power is transmitted to a single crank upon the main shaft. The agent that is to give motion is AIR, expanded by the heat of the furnaces already named. In a word, the caloric engine is a steam engine made to go by elastic expansive air at a low pressure, instead of the elastic expansive steam at a higher pressure.

The advantages claimed for the caloric engine are imposing. 1. Economy of space. 2. Safety from explosion and accident. 3. Incidental ventilation for the entire ship, since it is proposed to draw the supplies of air from the ship's hull. 4. Economy in first cost. 5. Economy in running, requiring but one fifth the men. 6. Lastly and chiefly—economy in fuel; a saving of nine-tenths, or at least four-fifths the fuel ordinarily consumed by steam engines of equal power.

---

☞ The communication of "P. C., Tillipally, Dec. 13"—though not quite suitable for publication in detail—manifests an interest in the new calendar which we are glad to see among the natives, and we trust that he will use his influence to circulate widely this little volume, which, he says, contains "many valuable scientific, political, meterological and similar other interesting articles." His suggestion that "each and every individual of the eight hundred educated natives exert an influence at least over five of his neighbors," is a good one, but as all of this class will probably not do it, C. P., and those who feel a like interest in freeing their countrymen from their bondage to superstition and idolatry must make up the deficiency by endeavoring to exert an influence at least over *five times five* of their neighbors.

---

APPOINTMENTS.—The *Government Gazette* announces that E. L. Layard, Esq., is appointed Deputy Fiscal, Western Province; A. O. Brodie, Esq., Magistrate at Pt. Pedro, but to act at Kornegalle as Judge; W. G. Forbes, Esq., Assistant Agent at Matura; S. Casie Chitty, Esq., District Judge, Chilaw.

## Correspondence of the Morning Star.*

### [illegible] RESULTS OF ENGLISH EDUCATION.

SIR,—[illegible] encouraged by the unexpected favorable [illegible] with in the impartial columns of your pa[illegible] proposed and expected to be taken u[illegible] unable to do justice to it, as it requires to be [illegible] pen of eminent writers, men of extensive obser[illegible] men and things, and of such a commanding view of [illegible] past and the present, as to predict the future. And it was not at all intended by me to discuss it in all its extent and bearings, but to give expression to a few thoughts that occurred to me in connection with the prevalent but mistaken opinion that English education in this province has been carried to a dangerous extent. It has even excited such fears in some of those who have the lead of the community, that it was thought necessary to consult measures for the putting out of an important source of light. The system of education, now in progress, has several times been assailed from different quarters. It is charged with being a fruitful source of spreading the seeds of infidelity and atheism on the one hand, and dissoluteness on the other; and to have entirely failed of accomplishing the original object for which it was started, as it is said to turn out the recipients of it to a deplorable worldliness. Again, it is said by some that it makes many a promising youth indolent and unfitted for any manual labor, and that the educated are so numerous that many of them suffer greatly for want of situations. In regard to all these deplorable accounts of what are said to be the results of English education, to whatsoever extent they may be true, it must be observed in general that they are only such evils as are always incidental to, and attendant upon, every reformatory movement in a community. I believe it will be admitted on all hands, that every item of sociality, refinement and comfort, in what would be considered a civilized community in any portion of the globe or in any age, has been the result of *education* in the extensive signification of the term. It would be superfluous to challenge any one to show a single instance of a community having ever attained to an elevated position in society without education. What man of common sense, will then for a moment, call in question, the propriety of employing education for raising the degraded Hindu community, for dispelling the intellectual and moral gloom that pervades the mass of the people, and for invigorating the minds enfeebled under the crushing sway of a blind and bigotted priesthood? I have the boldness to assert that nothing short of the light of true science can subserve the process of transformation (so to speak) that is evidently needed for placing the people, as a mass, on a level with the enlightened portion of the globe.

In regard to the statement of some that many who have been confined to book-learning, are rendered unfit to engage with alacrity and skillfulness in any work requiring manual labor, and that they, being too many for the one kind of employment aimed at, are greatly disappointed and disheartened when they do not receive it, I would remark that this state of things is by no means undesirable in order to effect great improvements in the sentiment of the Hindu public. An English education, and especially the one derived from missionary establishments, was formerly a frightful object to the minds of the people. Gradually it has been becoming one to be desired, and now it begins to be considered an object that cannot be dispensed with. When we contemplate the fact that education is an indispensable element in working out the elevation of the community, we shall see the importance of the change of sentiment alluded to. Besides, the low motive that has hitherto been in operation for obtaining education, is now giving way and the more commendable one of desiring it for its own sake is adopted. I think this is an important item, worthy the notice of those who watch with earnestness and anxiety the onward movement of the community towards the eminence of reformation.

Again, those who fear the indolent habits alluded to, or rather pity the condition of the youth who are thus wandering about for want of employent, need not despair. Such persons will, by pressure of necessity, soon find themselves obliged to engage in any kind of work and be warranted to regard all kinds of honest occupations honorable, and all guardians of youth will be brought to see the importance of training them for such common honest duties. The absurd distinctions of occupation, formed by the peculiar habits and customs of the Hindus, and the meanness which heathenism or rather Hindu sentiment attaches to some kinds of work, are all to be rejected and a right regard of the occupations of man must be brought on. It appears to me that a minute observer of the nature and tendencies of the elements that are at work in the native community of this province, cannot fail to notice that the present system of education has told and will tell mightily upon the fashion of the Hindu mind in the three-fold aspect of its moral, intellectual and spiritual renovation. Surely the country is now in a process of transformation wherein we cannot fail to witness the commotions attending the action of opposite elements. And we may hope that the ultimate settling of the community will be in a right direction.

Before concluding, I must observe that touching the question whether it still comes under the proper province of missionary operations to encourage, extend or sustain the educational establishments, I should hesitate to pronounce my opinion till I am sure that the native community are advanced enough to take upon themselves the management of the same. In endeavoring to be as brief as possible, I fear I have failed to do justice to my thoughts. Begging to be excused for any thing that might be deemed unbecoming boldness in advancing an opinion, I am, again, yours,

Batticotta, Dec. 13, 1852. REVIEWER.

### IMPOSITION AND SUPERSTITION, AND THEIR DETECTION.

SIR:—The people of Jaffna often relate with wonder the miracle performed at the Nellore Kunthaswamy temple of a person's having his tongue cut off, and soon after presenting himself with the organ quite grown out again. Something similar to this occurred at Batticotta, a few days ago, and as they should know all the miracles in this their own native land, I will in brief relate the circumstances of the transaction on the authenticty of which they may implicitly rely.

A brahmin boy, aged about 14, came begging. When interrogated as to who he was and what he wanted, he gave no answer, but merely motioned with the head and hands and showed a paper, stating that he was born without a tongue. He then opened his mouth, which exhibited a very different appearance from that usual in the human mouth. The floor of the mouth, where the tongue usually lies, was quite empty. Far back in the throat was a fleshy piece which appeared perfectly motionless—a sad case indeed! In pity upon the poor boy, something was benevolently attempted for his relief. After due ceremony, two fingers of the right hand were introduced into his throat—there skilfully touching and exciting certain nerves lying at the base of the tongue in individuals where that organ exists. The boy underwent certain spasmodic contortions of the body during which the before-mentioned fleshy growth seemed to elongate little by little, till at last it came to resemble a real tongue so nearly that several thought that it must be indeed a *bona fide* tongue. To test this, was the next thing. The boy was urged to speak. The action of the tongue (for so it was) seemed to come with some difficulty; but ere long and with a little compulsion he really and truly spoke, and went away no more dumb. Now if the growth again of a cut tongue at Nellore be so much a miracle, how much greater is this where one born with only a mere bit of flesh away back in the throat, has a tongue at once fully produced and uses it in a short time freely!

The priest at the Nellore temple must certainly relate this occurrence in the hearing of Kanthaswamy, and stir him up to attempt some yet greater miracle, else his fame will lessen. Should he, in attempting the communication, find him dull of hearing, he must either send him to Batticotta where miracles are done now-a-days, or get his maker, the brass-smith, to come and bore out his ears. Yours truly, FISK.

*To the Editor of the Morning Star.*

